### தூத்துக்குடி விமான நிலையத்திற்கு நாளை வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## தூததுக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, பிப். 23-

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிப்ரவரி 24, 25 தேதிகளில் நடைபெறவுள்ள அரசு நலத்திட்டம் வழங்குதல், முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்கிவைத்தல், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தி.மு.க தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகைதர உள்ளார்.

பிப்ரவரி 24ம் தேதி காலை 10 மணியளவில் தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வருகைதரும் முதலமைச்சர் அவர்களுக்கு தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பாக அன்பான வரவேற்பு வழங்கப்பட உள்ளது.



இந்த நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், பூத் டிஜிட்டல் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர், பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சேலம் மாநகரம் 7வது கோட்டத்தில் SCCB காலணியில் ரூ 27 லட்சத்து 75 ஆயிரம் செலவில் மறு சீரமைக்கப்பட்ட பூங்காவை மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் திறந்து வைத்தார். உடன் அஸ்தம்பட்டி மண்டல குழு தலைவர் உமாராணி, துணை மேயர் சாரதா தேவி மாநகராட்சி ஆணையாளர். இளங்கோவன் ஆகியோர் இருந்தனர்.

### 'திராவிட மாடல்' ஆட்சியில்

# இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆதாரங்களுடன் விளக்கம்!

சென்னை. பிப்.23-

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ், தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு திராவிட மாடல் ஆட்சியில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்று ஆதாரங்களுடன் குறிப்பிட்டார் .

அவர் கூறியதாவது:

நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, TNPSC மற்றும் பல்வேறு தேர்வு முகமைகள் மூலமாக பணியாளர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளார்கள்.



TNPSCல் மட்டும் 45 ஆயிரத்து 126 நபர்களும், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 24 ஆயிரத்து 927 நபர்களும், ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக 12,894 நபர்கள், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் வாயிலாக 11,244 நபர்கள் என மொத்தம் 94 ஆயிரத்து 191 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு, பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், மேற்படி தெரிவு முகமைகள் தவிர்த்து, உள்ளாட்சி அமைப்புகள், அரசு துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் நேரடி நியமனம் வாயிலாக 54 ஆயிரத்து 864 நபர்களுக்கும், அரசுப் பணியில் பணிபுரிந்து உயிர் நீத்த அரசு பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் 5 ஆயிரத்து 899 நபர்களுக்கும் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட 178 நபர்களுக்கும் என மொத்தம் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 132 நபர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பணியில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுமட்டுமல்லாமல், உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழில் நிறுவனங்களுடன் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க 1,176 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அரசு மேற்கொண்டு 12 இலட்சத்து 16 ஆயிரத்து 412 கோடி ரூபாய் மதிப்பிலான (மேசையைத் தட்டும் ஒலி) முதலீட்டை ஈர்த்துள்ளதன் மூலம் 36 இலட்சத்து 43 ஆயிரத்து 768 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை இவ்வரசு உருவாக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைமூலம் நடத்தப்பட்ட 2 ஆயிரத்து 474 வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம் 3 இலட்சத்து 7 ஆயிரத்து 345 இளைஞர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2026 ஆம் ஆண்டிற்கான ஆண்டு திட்ட அட்டவணை 13122025 அன்றே வெளியிடப்பட்டு தெரிவு நடவடிக்கைகள் காலதாமதமின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பதிலளித்தார்.

# கோவை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மற்றும் விருதுநகர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய மாவட்டங்களில் உள்ள பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் கோவை தெற்கு மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.அமுதபாரதி அவர்கள், பொள்ளாச்சி தெற்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, ‘ஒருவருக்கு ஒரு பொறுப்பு’ என்ற அடிப்படையில், எம்.அமுதபாரதி அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்; கோவை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 20 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.” எனவும்;

“விருதுநகர் வடக்கு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.வி.கந்தசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தாலும் - திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.ஆர்.பாபு அவர்கள் உடுமலைப்பேட்டை தெற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவர் தான் வகித்துவந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட காரணத்தாலும் விருதுநகர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய மாவட்டங்களில் பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 20 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் கோவை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு சூலூர் பெ.சுரேஷ்குமார் - விருதுநகர் வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு பொ.சக்திவேல் - திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு யூ.சி.ஈஸ்வரசாமி ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**கோவை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக சூலூர் திரு. பெ.சுரேஷ்குமார்,** 4/119ஏ, உப்பிலியந்தோட்டம், பீடம்பள்ளி அஞ்சல், சூலூர் தாலுக்கா, கோவை மாவட்டம்-641 016 அவர்களும்;

**விருதுநகர் வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக திரு. பொ. சக்திவேல்,** 58-எச், அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம் - 626 130 அவர்களும்;

**திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக திரு. யூ.சி. ஈஸ்வரசாமி,** 11/52, உரல்பட்டி, ஆண்டியக்கவுண்டனூர், உடுமலை தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் - 642204 அவர்களும்

தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 890 வாக்குச்சாவடிகளிலும்

# மகளிர் படையினர் வீடு வீடாக சென்று முதலமைச்சரின் திட்டங்களை விளக்கி பிரச்சாரம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

செஞ்சி பிப் 21

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள 890 வாக்கு சாவடிகளிலும் மகளிர் படையினர் வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசு செய்த அனைத்து திட்டங்களையும் சாதனைகளையும்மக்களிடம் எடுத்துக் கூறி பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தனது அறிக்கையில் கூறுகையில்:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர்முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் பெண்களின் முன்னேற்றமே தமிழ் சமுதாயத்தின் முன்னேற்றம் என்னும் கொள்கை உறுதியுடன்தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர்களுக்கு பல்வேறு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்.அந்த வகையில் திராவிட மாடல் ஆட்சியில்மகளிர் விடியல் பயணம், மாவட்டந்தோரும் தோழி விடுதிகள், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையில் மகளிர் காண நலத்திட்டங்களையும் சாதனைகளையும் செய்துள்ள முதலமைச்சரின் திட்டங்களை தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் மகளிர்களிடத்தில் எடுத்து சென்று சேர்த்திட வேண்டும் என்ற நல்ல நோக்கில் வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் மகளிர் படை வீடு வீடாக சென்று பரப்புரை செய்ய வேண்டும் என்று நம்முடைய கழக தலைவர் அன்புத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அன்பு கட்டளைக்கிணங்க விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள 890 வாக்குச்சாவடிகளிலும் 23ஆம் தேதி முதல் உலக மகளிர் தினமான மார்ச் 8ம் தேதி வரை வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசு செய்த அளப்பரிய சாதனைகளை விலக்கி பரப்புரை மேற்கொள்ள உள்ளனர்.



இதையடுத்துவிழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ளசெஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் வாரியாக வெல்லும் தமிழ் பெண்கள் வீடு வீடாக பரப்பை செய்வதற்காக பயிற்சி கூட்டங்கள் நேற்று செஞ்சி தொகுதியில் நடைபெற்றது . மேலும் இன்று திண்டிவனத்திலும்,23ஆம் தேதி மைலம்ஆகிய சட்ட மன்ற தொகுதிகளில்பயிற்சி கூட்டங்கள் நடைபெறுகிறது.இந்த பிரச்சார பரப்பரை நிகழ்ச்சி நாளை 23ஆம் தேதி முதல் தொடங்கி மார்ச் 8 ஆம் தேதிவரை 14 நாட்களுக்கு நடைபெறுகிறது.

ஒரு நாளைக்கு 15 முதல் 20 வீடுகளுக்கு நேரில் சென்று முதலமைச்சரின் திட்டங்களை பரப்புரை மேற்கொள்ள வேண்டும் பரப்புரைக்கு செல்லும் முன்னர் இந்தந்த பூத் குழுவில் உள்ள 10 மகளிர் குழுவினரும் தலைமைக் கழகம் தந்துள்ள பேஜ்சை கட்டாயம் அணிந்து செல்ல வேண்டும். தலைமை கழகம் தந்துள்ள டைரி மற்றும் வீடுகளில் ஒட்ட வேண்டிய ஸ்டிக்கர் அனைத்தையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மகளிர்களுக்கு டைரியைதரும் போது அந்த டைரியின் முதல் பக்கத்தில் உள்ள QR code ஐ ஸ்கேன் செய்ய வேண்டும். அப்படி ஸ்கேன் செய்யும்போதுமுதலமைச்சரின் வீடியோ செய்தியை அந்த வீட்டில் உள்ள மகளிரை பார்க செய்ய வேண்டும்.அதன் பிறகு நம்முடைய முதல்வர் அவர்கள் 5000 ரூபாய் மகளிர் உரிமைத்தொகை அள்ளி வழங்கியதையும், இனி மகளிர் உரிமைத் தொகைரூபாய் 2000 ஆக உயர்த்தப்படும் என்று உறுதி அளித்ததையும்அவர்களிடத்தில் எடுத்து கூறிவருகின்ற தேர்தலில் அந்த மகளிரையும்,அவர்களது குடும்பத்தினரையும் நமக்கு ஆதரவு தர வேண்டும் என வலியுறுத்தி கூற வேண்டும்.பெண்களுக்கான இந்த நலத்திட்டங்கள் அனைத்தும் தொடர்வதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு உங்களது ஆதரவை அளிக்க வேண்டும் என்பதையும் எடுத்து கூறி அவர்கள் ஆதரவு தர9489894840 என்ற தொலைபேசி எண்ணிற்கு MisedCall கொடுக்க சொல்ல வேண்டும். அடுத்து அப்பெண்ணிடம் புகைப்படம் எடுக்க அனுமதி பெற்று தரப்பட்டுள்ள டைரியின் நடுபக்கத்துடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பெண் புகைப்படம் எடுக்க அனுமதி தராவிட்டால் வீட்டின் வெளியே வந்து அந்த வீட்டின் கதவில் ஸ்டிக்கர் ஒட்டிபுகைப்படம் எடுக்க வேண்டும்.

இறுதியாக அப்பெண்ணிடம் நேரம் ஒதுக்கிய தற்கா நன்றியை தெரிவித்து விடைபெற்று அடுத்த அடுத்த வீட்டிற்கு சென்று பரப்புரை மேற்கொள்ள வேண்டும். மேலும் அந்தந்த பூக்களில் வீடுவீடாகச் சென்று நடைபெறும் பரப்புரையில் அந்தந்த பூத்களில் அடங்கியுள்ள மகளிர் அணிமகளிர் தொண்டரணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளிட்ட பெண் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் பூத் மகளிர் குழுவினரிடம் இணைத்து இப்பரப்புரையில் வெற்றிகரமாக ஈடுபட வேண்டும் என்று அன்புடன்கேட்டுக்கொள்கிறேன் என இவ்வாறு தனது செய்தி அறிக்கையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 27-02-2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் **“கலைஞர் அரங்கத்தில்”** எனது தலைமையில்;

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் என். மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் - வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி. பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ. சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன், பி.டி. செல்வகுமார், ஜெ. பாலகங்காதரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா;

2. சட்டப்பேரவைத் தேர்தலில் நமது அணியின் கோரிக்கைகள்

3. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள்

4. ஆக்கப் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.02.2026

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை எஸ். நடராசன்
### பிப்ரவரி 23 (1984)



**சோழ மண்டலத்தின் தலைநகராம் தஞ்சையில் கழகம் வளர்த்த தீரர். அய்யா – அண்ணா நெறிகளை வாழ்க்கை நெறியாகக் கொண்டு உழைத்த சுயமரியாதைச் சுடர். சோதனைக் காலங்களிலும் கலைஞர் தலைமையில் ஏறுநடை போட்ட தோழர்.**

**தஞ்சை நகரச் செயலாளராக தொடர்ந்து 25 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**தஞ்சை நகராட்சி உறுப்பினர், தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.**

**மிசா கொடுமையையும் தாங்கியவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“சிதம்பரத்து நடராசர் நடனமாடுவதற்காக ஒற்றைக் காலில் நிற்கிறார். இவரும்தான் கொண்ட கொள்கையில் – எடுத்த காரியத்தை முடிப்பதில் ஒற்றைக் காலில் நிற்கக் கூடியவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழாரம் சூட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**